சீடத்துவம் : தந்தை இரக்கம் இரக்கமுள்ளவராய் இருப்பது போல

மே 2016

இறைவனையும் மனிதத்தையும் இணைப்பது இரக்கம்

நோக்கம் :(அனைவரும் மெதுவாக வாசிக்கவும்) வார்த்தையான இயேசு, மனித உருவெடுத்து மனித குலத்தை இறைவனிடம் கொண்டு சென்றார். இரக்கமுள்ள தந்தை கடவுளின் முகம் தான் இயேசு. கிறிஸ்து வழியாக நாமும் கடவுளின் இரக்கத்தை வெளிப்படுத்துகிறோம்.

தொடக்கப் பாடல்: <u>உன்னதத்தின் ஆவியே</u>

உன்னதத்தின் ஆவியே
உந்தன் பக்தர் உள்ளத்தில்
ஊற்ற வேண்டும் இந்த நாளிலே
உலகமெங்கும் சாட்சி நாங்களே

பெந்தெகோஸ்தே பெருவிழாவிலே
பெருமழை போல் ஆவி ஊற்றினீர்

துயரமான உலகிலே

சேர்ந்து போகும் எங்களை

தாங்க வேண்டும் உந்தன் ஆவியால்
(உன்னதத்தின்)

தொடக்கச் செபம்: அதிச உறுப்பினர்களில் ஒருவரை தொடக்கச் செபம் சொல்ல அழைத்தல்.

வாழ்வை நோக்குதல்:

(இரவு உணவு நேரம். அனைவரும் உணவு உண்ண அமர்ந்திருக்கின்றனர். சாரதா தன் மகன் சுனிலுடன் தனியே சற்று தள்ளி அமர்ந்திருந்தார்).

சாரதா : (மெல்லிய குரலில்) சுனில், இங்கு இருப்பவர்களில் யாரும் உன்னை கட்டுக் கொள்ளவே இல்லை! மிகவும் வேதனையாக உள்ளது….

ஜானகி : ஹெய், சியூ, உங்களை பார்த்து நாட்கள் ஆகின்றதே!

சியூ : ஆமாம், எப்போதாவது இப்படி ஒன்று கூடுவது மிகச் சிறப்பாக உள்ளது.

ஜானகி : இதோ! ஜெவ், மேரி, அஸ்லினாவும் வருகிறார்கள்.

ஜெவ்/மேரி/

அஸ்லினா : ஆய்! இருவரும் எப்படி இருக்கிறீர்கள்?

மேரி : இந்த பெண் இங்கு என்ன செய்கிறார்? இவரைப் பற்றி வீட்டுக்காரருக்கு தெரியாத என்ன?

அஸ்லினா : ஆமாம், இவர் நமது சமூகத்திற்கு கலங்கம் ஏற்ப்படுத்துகிறார்!

சியூ : ஏன்? அவள் என்ன செய்தாள்?

அஸ்லினா : இவளுடன் நட்புக் கொள்வது....

ஜானகி : இவளைப் பலருக்கு நன்கு தெரியும், உங்களுக்கு உண்மையாகவே இவளைப் பற்றி தெரியாதா, சியூ?

சியூ : என்ன செய்தி? கொஞ்சம் காதில் போடுங்களேன்!

மேரி : அவள் ஓர் தனித்து வாழும் தாய்.

ஜானகி /

அஸ்லினா : அவளை யாரும் கண்டுக் கொள்ள வேண்டாம்.

ஜெவ் : இங்கு என்ன நடக்கிறது? ஏன் இந்த பெண்மணியைப் பற்றிக் கிசுகிசுக்கிறீர்கள்? இங்கிருந்து போங்கள்....

(லோபெஸ்,ராபெல்,ரூத் ஆகியோர் வருகிறார்கள்)

ராபெல் : ஜெவ், உங்களிடம் கொஞ்சம் பேசலாமா?

சகோதரிகளே கொஞ்சம் பேசாமல் இருக்கிறீர்களா?

ரூத் : இங்கு என்ன நடக்கிறது? கொஞ்சம் சொல்லுங்களேன்!

சியூ : அந்த தனித்து வாழும் தாயார், எங்கள் மத்தியில் இருப்பதைப் பற்றிதான் பேசிக் கொண்டிருக்கிறோம்.

ரூத் : என்னமோ என்று நினைத்தேன். நான் போய் அவளிடம் பேசுகிறேன்.

சியூ/அஸ்லினா/

ஜானகி/ மேரி : அய்யோ! பேசப் போறீங்களா?

ரூத் : சாரதா, உங்கள் மகன் மிகவும் அழகாக இருக்கிறான்! என்ன வயது?

சாரதா : 8 மாதம். நன்றி. மற்றவர்கள் என்னை இங்கு வெறுப்போடு பார்க்கிறார்கள்!

ரூத் : அவர்கள் சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் வெறுக்கப்படுபவர் அல்ல, மற்றவர்களைப் போலவே நீங்களும் தந்தை கடவுளால் அன்பு செய்யப்படுகிறீர்கள். நீங்கள் தனித்து வாழும் தாய். நீங்கள் எதிர் நோக்கும்

பிரச்சனைகள் என்ன? என்னிடம் தாராளமாக பகிர்ந்துக் கொள்ளலாம். என்னால் முடிந்தவரை உதவுகிறேன்.

சாரதா : மிகவும் நன்றி. உங்கள் வார்த்தைகள் எனக்கு உற்சாகம் அளிக்கிறது.

ரூத் : குழந்தையைப் பராமறிக்க ஆள் வேண்டுமென்றால், நான் இருக்கிறேன். உங்களைப் பற்றி கிசுகிசுக்கும் என் நண்பர்களிடம் பேசிவிட்டு வருகிறேன்.

ரூத் : சாரதாவைப் பற்றி நீங்கள் போசிய வார்த்தைகளுக்காக நீங்கள் வெட்கப்பட வேண்டும்.

ஜானகி : நீ என்ன செல்கிறாய்? நாங்கள் அவள் பக்கமே போகவில்லையே?

மேரி/ சியூ : ஆமாம்.

அஸ்லினா : அவளைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை!

ரூத் : சங்கடமான நிலையில் இருக்கும் சாரதாவை மனிதாபிமானத்துடன் பார்ப்பதால் உங்களுக்கு என்ன நஸ்டம்? அவளின் தேவைப்பற்றியும், குழந்தையைப் பற்றியும் விசாரிக்கக் கூடாதா? இப்படி உங்கள் குடும்பத்தில் ஒருவர் இருந்தால் எப்படி நீங்கள் உணர்வீர்கள்?

ஜானகி : உண்மைதான் ரூத், நாங்கள் இரக்கமற்ற முறையில் நடந்துக்கொண்டோம்.

சியூ/அஸ்லினா : வாங்க போய், சாரதாவையும் குழந்தையையும் பார்ப்போம்.

மேரி / ரூத் : நல்லது, கடவுள் இரக்கத்தின் வழியாகவே நம்முடன் உறவாடுகிறார் என்பதை நினைவில் வையுங்கள்.

- (இருவராக) (ஜானகி, அஸ்லினா, மேரி, சியூ) ஆகியோர் சாரதாவுக்கு எதிராக அவர்கள் பேசிய / நடந்து கொண்ட விதம் நிலையற்றது என்பதனை உணர்ந்துக் கொள்ள அவர்களுக்கு உதவியது என்ன?

இறைவார்த்தை : விடுதலைப் பயணம் 34: 5-9

- வாசகத்தை இரண்டு முறை வாசிக்கவும்.
- உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தை, பக்தியோடு இடைவெளி விட்டு, மூன்று முறை கூறவும்.
- தேர்வு கொண்ட இறைவார்த்தையைச் செவிமடுக்க இரண்டு நிமிடம் மௌனம் காக்கவும்.

- சிறிய குழுக்களில் ‘வாழ்வளிக்கும் வார்த்தை’ யை பகிர்ந்து, தேர்வு செய்யவும்.
- பெரிய குழுவில் ‘வாழ்வளிக்கும் வார்த்தை’ யை பகிர்ந்துக் கொள்ளவும்.

இரக்கத்தில் வாழ்தல்

(பங்கெடுப்பாளர் “வாழ்வைப் பார் மற்றும் இறைவார்த்தை” ஆகிய இரு பகுதிகளில் உள்ள கருத்தினைத் தெடர்புப்-படுத்துவார்).

- மற்றவர்களால் புறக்கணிக்கப் பட்டவற்களுக்கு எவ்வாறு உதவ வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்?
- சமூகமாகவோ அல்லது தனியாகவோ மேற்க்கொள்ளவிருக்கும் இரக்கச் செயலைக் குறிப்பிடவும்.

இறுதி செபம்

- பரிந்துரைச் செபங்கள் / விண்ணப்பங்கள் செபிக்கவும்
- இரக்கத்தின் ஆண்டுச் செபத்தைக் கூறவும்.

இறுதிப் பாடல் : <u>தாய்க்கு அன்பு வற்றிபோகுமோ</u>

தாய்க்கு அன்பு வற்றிபோகுமோ தனது
பிள்ளை அவள் மறப்பாளோ
தாய் மறந்தாலும் நான் மறவேனே
தயவுள்ள நம் கடவுள் தான் உரைத்தாரே – தாய்

குன்றுகூட அசைந்து போகலாம்
குகைகள் கூட பெயர்ந்து போகலாம் - 2
அன்பு கொண்ட எந்தன் நெஞ்சமே
அசைவதில்லை பெயர்வதில்லையே (தாய்க்கு)

கூடுதல் வாசிப்பு :

திருவிவிலியத்தில் நாம் காண்பது போன்று, இரக்கம் என்பதுதான் நம்மை இயக்கும் உயிர் மூலச் சொல்லாக இருந்து நம்மீது உள்ள கடவுளின் செயல்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறது…...

அது தனது அடிப்படை இயல்பிலேயே அன்றாட வாழ்வில் வெளிப்படுத்தப்படும் உள் எண்ணங்கள், மனப்பான்மைகள், நல்லொழுக்கங்கள் போன்ற உறுதியான சிலவற்றைச் சுட்டிக் காட்டுகிறது..... கடவுளின் இரக்கம் என்பது நம் ஒவ்வொருவருக்குமான அவரின் அன்பான அக்கறை......இரக்கமுள்ள அன்புப் பாதையில்தான் கிறிஸ்தவர்கள் பயணிக்க வேண்டும்.....அவர் இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நாமும் இரக்கமுள்ளவராய் இருக்க அழைக்கப்படுகிறோம். (MV 9)

சீடத்துவம் : தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல

ஜூன் 2016

இரக்கம் அன்பின் செயல்பாடு

நோக்கம் : ஆன்மீக இரக்கச் செயல்களும், மனிதாபமான இரக்கச் செயல்களும் இயேசுவின் போதனையில் முக்கிய பங்கு வகிக்கிறது. நாம் இப்போதனைக்கு ஏற்ப வாழ்கின்ற போது, இயேசுவின் மெய்யான சீடர்களாக இருக்கிறோம் என்பதனை அறிய முடியும்.

ஆரம்பப் பாடல் : <u>அன்பினில் பிறந்த இறைகுலம்</u>

அன்பினில் பிறந்த இறைகுலம் நாமே
அன்பினைக் காத்து அறம் வளர்ப்போமே
அறம் வளர்ப்போமே – 2

ஒரு மனதோராய் அனைவரும் வாழ்வோம்

அருள் ஒளி வீசும் ஒருவழி காண்போம் - 2

பிரிவினை மாய்த்து திருமறை காப்போம் - 2

இம்மையில் இறைவன் திருவுளம் காண்போம்

(அன்பினில்)

ஆரம்பச் செபம் : செபம் சொல்ல அதிச உறுப்பினர்களில் ஒருவரை அழைக்கலாம்.

வாழ்வைப் பார்: :

(பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள், நோயுற்றோரைச் சந்தித்தல், பாதம் கழுவுதல், கைதியைச் சந்தித்தல், துயருற்றோரை ஆறுதல் படுத்தும் படங்கள்)

- மேலே உள்ள படத்தைக் கூர்ந்துக் கவனியுங்கள்.
- உங்கள் அன்றாட வாழ்வில் இவற்றில் ஏதேனும் ஒன்றை செய்கிறீர்களா?

இறைவனுக்கு செவிமடுத்தல்

எனவே இரக்கத்தை நாம் பெறத் தகுதிபெறுமாறு முதலில் நாம் கடவுளின் வார்த்தைக்குச் செவிமடுக்க நம்மையே கையளிக்க வேண்டும். அதாவது, நம்மிடம் வரும் இறைவார்த்தையைத் தியானிக்க நாம் அமைதியாய் இருப்பதன் பயனை மீண்டும் கண்டு பிடிக்க வேண்டும். இதன் மூலம்தான் நாம் கடவுளின் இரக்கத்தைத் தியானிக்கவும், அதை நமது வாழ்க்கை முறையில் நமதாக ஏற்றுக்கொள்ளவும் முடியும். (MV 13)

இறைவார்த்தை : லூக்காஸ் 10 : 30 37 (நல்ல சமாரியன்)

- வாசகத்தை இரண்டு முறை வாசிக்கவும்.
- உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தை, பக்தியோடு இடைவெளி விட்டு, மூன்று முறை கூறவும்.
- தேர்வு கொண்ட இறைவார்த்தையைச் செவிமடுக்க இரண்டு நிமிடம் மௌனம் காக்கவும்.
- சிறிய குழுக்களில் ‘வாழ்வளிக்கும் வார்த்தை’ யை பகிர்ந்து, தேர்வு செய்யவும்.

- பெரிய குழுவில் 'வாழ்வளிக்கும் வார்த்தை' யை பகிர்ந்துக் கொள்ளவும்.

இரக்கத்தில் வாழ்தல்

- உங்கள் அதிசாவில் இறை இரக்கத்தை வெளிக்காட்டும் அன்புச் செயல் ஒன்றை அடையாளம் காணவும்.
- யோசனை: அன்னியத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொட்டலங்களைத் தயாரித்து விநியோகிக்கலாம்.

இறுதி செபம்: மௌனமாக இறைபிரசன்னத்தை உணர்வோம்.

(கீழ்காணும் செபத்தை அனைவரும் இணைந்து செபிப்போம்)

....அன்பும் இரக்கமும் நிறைந்த இயேசுவின் திருஇருதயமே, எங்கள் அருகில் இருப்பவர்களுக்கு அன்புடன் நாங்கள் மேற்க்-கொள்ளும் காரியங்கள், உமது இரக்கத்தை வெளிப்படுத்தும் ஒன்றாக அமைய எங்களுக்கு அருள்புரியும். அமலோற்பவ அன்னையே, இரக்கத்தின் மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

இறுதிப் பாடல் : <u>உலகம் தராத அன்பை</u>

உலகம் தராத அன்பை
தருவாயே இயேசு பாலா
வளமில்லை எந்தன் நெஞ்சில்
அருள் தாரும் தேவபாலா - 2

கரைக்காண துன்ப வெள்ளம்
இருண்டோடும் வேளை வந்தீர் - 2
திருக்கைகள் நீட்டி என்னை – உம்
அருகில் அணைத்துக்கொண்டீர் - 2 (உலகம்)

கூடுதல் வாசிப்புக்கு

பசித்திருப்பவருக்கு உணவு கொடுத்தல், தாகமாய் இருப்பவருக்குத் தண்ணீர் கொடுத்தல், ஆடையின்றி இருப்பவருக்கு உடை உடுத்தல், அந்நியரை வரவேற்றல், நோயாளியைக் குணமாக்கல், சிறையிலிருப்போரைச் சந்தித்தல், இறந்தவரை அடக்கம் செய்தல் போன்ற உடல் சார்ந்த இரக்கச் செயல்களையும் நாம் மீண்டும் கண்டுபிடிப்போம்.
ஆன்மீக சார்ந்த செயல்களையும் நாம் மறவாதிருப்போமாக:

தன்னம்பிக்கையற்றவர்களுக்கு ஆலோசனை கூறுதல், அறியாமையில் உள்ளவர்களுக்குக் கற்பித்தல், பாவிகளை நன்னெறிப்படுத்துதல், துயருற்றோருக்கு ஆறுதலளித்தல், குற்றங்களை மன்னித்தல், நமக்குத் தீங்கு செய்வோரைப் பொறுமையாக ஏற்றுக்கொள்ளல், இறந்தோருக்காகவும் வாழ்வோருக்காகவும் செபித்தல். (MV 15)

சீடத்துவம் : தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பது போல

ஜுலை 2016

இரக்கம் இறைவனின் நீதி

நோக்கம் : இரக்கம் என்பது நீதிக்கு எதிரானதல்ல: அது ஒரு பாவி தன்னைத்தானே காண ஒரு புதிய வாய்ப்பு வழங்கவும், மனமாற்றம் பெறவும், நம்பிக்கை பெறவும் கடவுள் தேடிச்-செல்லும் வழியாகக் காணப்படுகிறது. (MV 21)

ஆரம்பப் பாடல் : எதை நான் தருவேன் இறைவா

எதை நான் தருவேன் இறைவா உம்
இதயத்தின் அன்பிற்கிடாக
எதை நான் தருவேன் இறைவா - 2

குறை நான் செய்தேன் இறைவா – பாவக்
குழியில் விழுந்தேன் இறைவா - 2
கறையாம் பாவத்தை நீக்கிடவே – 2 நீர்
கல்வாரி மலையில் இறந்தாயோ (எதை)

ஆரம்ப செபம்: செபம் சொல்ல அதிச உறுப்பினர்களில் ஒருவரை அழைக்கலாம்.

வாழ்வை நோக்குதல்:

மஹாமெட் அலி அக்சா, வயது 23, இடதுசாரி தீவிரவாத அமைப்பில் ஓர் உறுப்பினர். துருக்கி அரசாங்கத்தால் தேடப்பட்டு வந்த ஓர் கொலைக் குற்றவாளி. மே 13, 1981-ம் ஆண்டு ரோம் நகரில் புனித பேதுரு சதுக்கத்தில், திறந்தவெளி வாகனத்தில் ஏற முற்ப்பட்ட போது, பாப்பரசர் 2-ம் அருட் சின்னப்பரை நோக்கி நான்கு முறை சுட்டான். வயிற்றுப்பகுதியில் குண்டு பாய்ந்ததால், பாப்பரசர் கடுமையாகக் காயமுற்றார். குற்றவாளி பிடிப்பட்டான். 19 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டான். 2000-ம் ஆண்டு, பாப்பரசரின் பரிந்துரையின் படி இத்தாலிய அதிபர் மஹாமெட்டை விடுதலைச் செய்து, துருக்கிக்கு நாடு கடத்தப்பட்டார்.

- புனித பாப்பரசரின் இவ்விரக்கச் செயல், கடவுளின் நீதியை எவ்வாறு வெளிப்படுத்துகிறது? (பகிர்ந்துக் கொள்ளவும்)

இறைவார்த்தை : அருளப்பர் 8 : 3 – 11

(விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்)

- வாசகத்தை இரண்டு முறை வாசிக்கவும்.
- உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தை, பக்தியோடு இடைவெளி விட்டு, மூன்று முறை கூறவும்.
- தேர்வு கொண்ட இறைவார்த்தையைச் செவிமடுக்க இரண்டு நிமிடம் மௌனம் காக்கவும்.
- சிறிய குழுக்களில் ‘வாழ்வளிக்கும் வார்த்தை’ யை பகிர்ந்து, தேர்வு செய்யவும்.
- பெரிய குழுவில் ‘வாழ்வளிக்கும் வார்த்தை’ யை பகிர்ந்துக் கொள்ளவும்.

இரக்கத்தில் வாழ்தல் :

- எனக்கு / நமக்கு எதிராக குற்றம் இழைத்தவர்களை மன்னிக்க நான் / நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் என்ன?
- நீங்கள் / நான் மன்னிப்பதற்காக செய்யவிருக்கும் செயலை முடிவு செய்யவும்.

இறுதிச் செபம்:

குடும்பத்தில் ஒருவரை இறுதிச் செபம் சொல்ல அழைத்தல்.

இறுதிப் பாடல் : <u>ஆகட்டும் ஆண்டவரே</u>

ஆகட்டும் ஆண்டவரே என்னில்
அருளுயிர்த் தந்திடும் அன்பரும் வார்த்தை
ஆகட்டும் ஆண்டவரே

வாழ்வைத் தந்திடும் வார்த்தை அதன்
வழியாய் அமைந்ததும் வார்த்தை – 2
தேன்போல் இனித்திடும் வார்த்தை – 2
என்னைத் தேடியே வந்ததும் வார்த்தை
(ஆகட்டும்)

சீடத்துவம் : தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல

ஆகஸ்டு 2016

சமூகத்தில் இரக்கத்தின் அடையாளமாக இருத்தல்

நோக்கம் : தந்தை கடவுள் தமது இரக்கத்தை நமக்கு காட்டியிருக்கிறார். வியப்பு அளிக்கும் இறைஇரக்கத்தை காணுங்கள்.

ஆரம்பப் பாடல் : மகிழ்வோம் மகிழ்வோம்

மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசுராஜன் நம் சொந்தமாகினார்
இந்தப் பாதளத்தின் சொந்தக்காரரவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்
ஆ.....ஆனந்தமே......பரமானந்தமே - இது
மாபெரும் பாக்கியமே - இந்தப் பாதளத்தின்....

சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்துவிட்டார்
புறம் போயினும் கண்டுக் கொண்டார்
தம் ஆசீதனை எனக்கும் அளித்து
அதைப் பெற்றுக்கொள் என்றுரைத்தார்
ஆ…..ஆனந்தமே

அவர் வரும் நாளிலே
என்னைத் தேர்வு பெற்று
அன்பாய் கூட்டியே சேர்த்துக்கொள்வார்…..2
அவர் சமூகமதில் அங்கு அவருடனே
ஆடிப்பபடி மகிழ்ந்திடுவேன்
ஆ…..ஆனந்தமே

ஆரம்ப செபம் : ஆரம்ப செபம் சொல்ல அதிச உறுப்பினர்களில் ஒருவரை அழைக்கலாம்.

வாழ்வைப் பார்த்தல்

டிசம்பர் 26, 2004 அன்று ஜோனின் பிறந்தநாள். எனவே தனது மூன்று குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு கடற்கரைக்குப் போனார். திடீரென்று அவரது ஒரே மகன் அப்பா அங்கே பாருங்க, வானத்துக்கு மேல அலை வருதுன்னான். கண்மூடி கண் திறப்பதற்குள் அலை அவர்கள் அனைவரையும் அள்ளிச் சென்றது. ஒரு மரத்தின் உச்சியில் ஜோன் தொங்கிக் கொண்டிருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகுதான் ஒட்டு மொத்த வாழ்க்கையும் முடிந்து போனது என்று அவருக்குத் தெரிந்தது. இறந்து போன ஆயிரக்கணக்கானவர்களிடையே அவருடைய மூன்று பிள்ளைகளுடைய உடல்களும் கிடந்தன. நெஞ்சம் குமுறியவாறு அவரே குழி வெட்டி அடக்கம் செய்தார். இதற்குப் பிறகு நான்கு நாட்கள் வீட்டிலேயே தன் மனைவியுடன் முடங்கிக் கிடந்தார். நாட்கள் சில கடந்தபின், கொஞ்சம் சுதாரித்துக் கொண்டு அருகில் உள்ள கிராமத்திற்குத் தன் மனைவியுடன் சென்றார். தாய் தந்தையை இழந்து, அனாதைகளாக அழுதுக் கொண்டிருந்த பிள்ளைகள், இவர்களைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிப்பிடித்து அழ ஆரம்பித்தன. மனைவியின் துணையோடு பதினாறு குழந்தைகளுடன் இல்லம் திரும்பினர்.

இவர்களின் இரக்கவுணர்வைக் கண்ட நண்பர்களும் தங்களான உதவியை ஜோன் மற்றும் அவர் மனைவிக்கு உதவ முன் வந்தார்கள்.

- இக்கதையில் 'இறைவனின் இரக்கத்தை' பற்றி பகிர்ந்து கொள்ளவும்.

இறைவார்த்தை : கொலோசியர் 3 : 12–14 (கிறிஸ்துவ வாழ்வு)

- வாசகத்தை இரண்டு முறை வாசிக்கவும்.
- உள்ளத்தைத் தொட்ட வார்த்தை அல்லது வசனத்தை, பக்தியோடு இடைவெளி விட்டு, மூன்று முறை கூறவும்.
- தேர்வு கொண்ட இறைவார்த்தையைச் செவிமடுக்க இரண்டு நிமிடம் மௌனம் காக்கவும். -
- சிறிய குழுக்களில் 'வாழ்வளிக்கும் வார்த்தை' யை பகிர்ந்து, தேர்வு செய்யவும்.

இரக்கத்தில் வாழ்தல்

- ஓர் இரக்கச் செயல் புரிந்ததன் அனுபவத்தைப் பகிர்ந்துக் கொள்ளவும்.
- அடுத்து நீங்கள் செய்யவிருக்கும் இரக்கச் செயல் ஒன்றை தேர்வுச் செய்யவும்/ பகிர்ந்து கொள்ளலாம்.

இறுதி செபமாக அனைவரும் 'இரக்கத்தின் ஆண்டு' செபத்தை கூறவும்.

இறுதிப் பாடல்: <u>அழைக்கிறார் இயேசு ஆண்டவர்</u>

அழைக்கிறார் இயேசு ஆண்டவர்
ஆவலாய் நாம் செல்லுவோம்
அவர் பலியினில் கலந்திட
அவர் ஒளியினில் நடந்திட – 2
சாட்சிகளாய் என்றும் வாழ்ந்திட இந்நாளிலே
(அழைக்கிறார்)

-

அன்பினால் உலகை ஆளுவார்

ஆவியால் நம்மை நிரப்புவார்

அமைதியை என்றும் அருளுவார்

ஆனந்தம் நெஞ்சில் பொழியுவார்

விடியலின் கீதமாக முழங்குவார்

விடுதலை வாழ்வை நமக்கு வழங்குவார்

வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்

வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்

(அழைக்கிறார்)

கூடுதல் வாசிப்புக்கு :

மூவொரு கடவுளின் இதயத்திலிருந்தும் அவரது மறைபொருளின் ஆழத்திலிருந்தும் இரக்கத்தின் பெரிய ஆறு இடைவிடாது பொங்கியெழுந்து வழிந்தோடுகிறது. எத்தனை மனிதர்கள் இதை அணுகினாலும் இந்த ஊற்று ஒருபோதும் வற்றிப்போவதில்லை. கடவுளின் இரக்கம் ஒருபோதும் முற்றுப்பெறாது என்னும் காரணத்தால் தேவையில் இருக்கும் எந்த ஓர் ஆணும் அல்லது பெண்ணும் அதை எப்போதும் அணுக முடியும்.

அதைச் சூழ்ந்திருக்கக் கூடிய மறைபொருளின் வளமை என்பது அதிலிருந்து பொங்கி வரும் என்றும் வற்றா முழுநிறைவாக உள்ளது. (MV 25)